மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

25—

கட்டட வசதி

***22872—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, மாவேரிப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி, பால் உற்பத்தியில் புதிய வரலாற்றுச் சாதனை படைத்துக் கொண்டிருக்கும் தாயுள்ளம் கொண்ட எங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, கோடானுகோடி நன்றிகளை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் ஒன்றியம், அரூர் சட்டமன்றத் தொகுதியில் மாவேரிப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்கு தணிக்கை அறிக்கையின்படி ரூபாய் ஒரு இலட்சத்து, 12 ஆயிரத்து, 711 நிகர இலாபம் கிடைத்துள்ளது. இச்சங்கத்திற்குக் கட்டட நிதியாக ரூ.6,446/- மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க துணை விதியின்படி இலாபத்தில் கட்டட நிதியாக அதிகபட்சம் 10 சதவிகிதம் மட்டுமே ஒதுக்கீடு செய்ய முடியும். மேலும், இச்சங்கத்திற்கு கான்கிரீட் கட்டடம் கட்ட ரூ.4.5 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இச்சங்கத்தில் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் சங்க சொந்த

நிதியிலிருந்து கட்டடம் கட்ட தற்போது வாய்ப்பு இல்லை. மேலும், இதுபோன்ற பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் கட்டடம் கட்ட நிதியுதவி செய்ய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தில் வழிவகை இல்லை. ஆகவே, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தொகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டால், சங்கத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்ட இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடும் வறட்சி பாதித்திருக்கிறபோது விவசாயிகளை வாழ வைத்தவர்கள் பால் உற்பத்தியாளர்கள். சுமார் 22 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் தமிழகத்தில் இருப்பதாக விவரம் கூறுகிறது. இதை உண்மையிலேயே இன்றைக்கு அந்த மக்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதுகாக்கிற ஒரு துறையாக நான் பார்க்கிறேன். நான் கேட்டிருக்கக்கூடிய மாவேரிப்பட்டியில் ஏறக்குறைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விவரத்தைப்போல 12 கிராமங்களைச் சார்ந்த மக்கள், காவாப்பட்டி, மரவேரிப்பட்டி, மாவேரிப்பட்டிபுதூர், சோளைப்பட்டி, சக்கிலிவாடி, ராயப்பன்கொட்டாய் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தினமும் காலையிலே 1,500 லிட்டர், மாலையில் 1,500 லிட்டர் பாலினை சொசைட்டிக்குக் கொண்டு வந்து அளிக்கிறார்கள். இவர்கள் வந்து நிற்பதற்குக்கூட இடம் கிடையாது. ரோடு ஓரமாக நின்று மரத்தடியில் பாலினை பெற வேண்டிய அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, இந்தத் துறையின்மூலமாகக் கட்ட முடியவில்லை என்று சொன்னால், சென்ற ஆண்டு என்னுடைய அரூர் தொகுதியில் அச்சல்வாடி பஞ்சாயத்து, ஓடசல்பட்டி கிராமத்திற்கு, ஓடசல்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்டுவதற்காக பணம் வழங்கியது மீண்டும் திரும்பி வந்துவிட்டது. கட்டடம் கட்டுவதற்கு யாரும் முன்வரவில்லை, ஆகவே, திருப்பி அனுப்பப்படுகிறது என்று வந்துவிட்டது.

2013 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டில்லி பாபு, கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: சட்டமன்ற உறுப்பினர் நிதி கொடுக்கப்பட்டும் கட்டடம் கட்ட முடியாதிருக்கும்பட்சத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துறையின்மூலமாகக் கட்டுவதற்கு அல்லது சட்டமன்ற உறுப்பினர் நிதியைபெகட துறையின்மூலமாக எடுத்துக்கொண்டு கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று திறந்து கொண்டிருக்கின்றோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை ஆய்வு செய்து, அவர் நிதி ஒதுக்கினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லி அதை நிறைவேற்றுவோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பால் உற்பத்தியாளர்களை உருவாக்கக்கூடிய இத்துறையில் எதிர்காலத்தில் தமிழக அரசு, எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்காக சிறப்பு நிதி ஒதுக்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூறியது போல, ஒன்றியத்திலிருந்து

கட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தில் வழிவகை இல்லை என்று சொல்லியிருக்கின்றோம். அதைப் பின்பற்றியாக வேண்டும். ஆகையால், அந்த சொசைட்டிக்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்றால் ஏற்கெனவே சொன்னதுபோல சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தோ, பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தோ கட்ட வேண்டும் அல்லது அந்த சொசைட்டி நடத்துகின்ற சொசைட்டியின்மூலமாக அதில் வரும் இலாபத்தைக் கொண்டுதான் கட்ட வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.லோ. ரமேஷ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

26—

சிப்காட் தொழிற்பேட்டை

***8932—திரு. கா.லோ. ரமேஷ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில், தற்போது ராணிப்பேட்டையில் 1,421 ஏக்கர் பரப்பளவில் 3 சிப்காட் தொழிற்பேட்டைகள் உள்ளன. மேலும், அதனை நான்காம்கட்ட விரிவாக்கம் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனவே, திருப்பத்தூரில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லையென்றாலுங்கூட, தொழில் முனைவோரின் தேவைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.